திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.த.பழனிகுமார், பி.இ.,

ந.க. அ3/ 11097/ 2017 நாள்: 23.02.2022

பொருள்:: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு - 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையின் கீழ் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்ய அரசாணை வெளியிடப்பட்டது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் - ஆணையிடல்.

பார்வை::
1. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை நாள்: 26.02.2021.
2. அரசுக் கடித எண்.9694/பணி 9(2)/2021-3 நாள்: 28.06.2021.
3. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் ஆ.கு.3/18395/2020 நாள்: 01.11.2021 மற்றும் 22.11.2021.
4. சார்நிலை அலுவலர்களின் முன்மொழிவுகள்.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

*********

ஆணை:-

பார்வை 1-ல் காணும் அரசாணையில் பத்தி 5-ல் (5.1) முதல் (5.4) வரை தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி "02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திடும் பொருட்டு, எந்தவித விதித்தளர்வும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level Higher than the Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2) எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்ட 12 இளநிலை வருவாய் ஆய்வாளர்களில் எந்தவித விதித்தளர்வும் (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத கீழ்காணும் 8 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவங்கி விளம்புகை செய்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம், (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | கோப்பு எண் |
|---|---|---|---|---|
| 1. | A.பெலிக்ஸ்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருச்சிராப்பள்ளி. | 04.07.2018 முற்பகல் | 04.07.2018 முற்பகல் | அ3/4373/2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | S.ஆறுமுகம்<br>தனி வருவாய் ஆய்வாளர்<br>(உ.பொ.வ)<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மணப்பாறை. | 16.08.2018<br>முற்பகல் | 16.08.2018<br>முற்பகல் | அ3/7554/2018 |
| 3. | A.ஆனந்தன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருச்சிராப்பள்ளி (கிழக்கு). | 10.11.2018<br>முற்பகல் | 10.11.2018<br>முற்பகல் | அ3/12055/2018 |
| 4. | M.ராதாகிருஷ்ணன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>மாவட்ட வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்,<br>திருச்சிராப்பள்ளி. | 28.11.2018<br>முற்பகல் | 28.11.2018<br>முற்பகல் | அ3/19166/2018 |
| 5. | K.பிரபாகரன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்டாட்சியர்<br>அலுவலகம், ஸ்ரீரங்கம். | 30.11.2018<br>முற்பகல் | 30.11.2018<br>முற்பகல் | அ3/19228/2018 |
| 6. | M.தமிழ்ச்செல்வி,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>முசிறி. | 30.01.2019<br>முற்பகல் | 30.01.2019<br>முற்பகல் | அ3/31055/2018 |
| 7. | A.அன்னக்கொடி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>தனித்துணை ஆட்சியர் (வருவாய்<br>நீதிமன்றம்) அலுவலகம்,<br>இலால்குடி. | 19.06.2019<br>முற்பகல் | 19.06.2019<br>முற்பகல் | அ3/9205/2015 |
| 8. | A.மணிமாறன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மணப்பாறை. | 18.10.2019<br>முற்பகல் | 18.10.2019<br>முற்பகல் | அ3/15843/2018 |

மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்ட இவ்வாணையினை தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- த.பழனிகுமார்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

/உத்தரவுப்படி/

மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்: தொடர்புடைய நபர்கள் - தலைமை அலுவலர்கள் மூலமாக.
நகல்: வருவாய் கோட்டாட்சியர், ஸ்ரீரங்கம்.
நகல்: தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்), இலால்குடி.
நகல்: மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.
நகல்: வருவாய் வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி (கிழக்கு)/மணப்பாறை/முசிறி.
நகல் : தலைமைக் கணக்கர் ஜே-பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர் முகாம் எழுத்தர்.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)/கணக்குகள்.
நகல்: அ3 - இருப்பு கோப்பு.